DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

MC.3/2024

Deposition of witness:PW1

| | | | |
|---|---|---|---|
| Name | பிரியங்கா | Taluk | |
| Husband's Name | வினோத்குமார் | Village | |
| Age | 31 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **17.04.2026.** | | | |

(Respondent present)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:**

நான், எனது மனுவில் எதிர்மனுதாரர் தரப்பில் என்னிடமிருந்து 30 லட்சம் ரூபாய் ரொக்கமும், மேற்கொண்டு 20 சவரன் நகையும் வரதட்சணையாக தரவேண்டும் என்று கூறி அடித்து கொடுமைப்படுத்தியதாக வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர், என்னை அடிக்கடி வந்து சந்தித்து அவருடன் சேர்ந்து வாழ கேட்டார் என்றாலும், அவர் என்னையும், எனது பிள்ளைகளையும் அடிக்கடி வந்து பார்த்துக் கொள்கிறார் என்றாலும், நான்தான், நான் எனது அம்மா வீட்டிற்கு சென்று எட்டு மாத காலம் ஆகியும் அதன் பிறகு கூட அவர் அவ்வாறு எதுவும் வந்து எங்களை பார்த்துக்கொள்வதில்லை என்றும், பிள்ளைகளை கவனிப்பதில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான், எனது அம்மா வீட்டிற்கு சென்றிருந்தபோதும் கூட குழந்தைகளுக்கான பள்ளி செலவு மற்றும் மருத்துவ செலவுகளை எதிர்மனுதாரர் தான் கவனித்து வந்துள்ளார் என்றாலும் சரியல்ல.

2. நான், எனது முதல் விசாரணையிலும், குறுக்கு விசாரணையிலும் கூறி உள்ளது போல் எதிர்மனுதாரருக்கு விவசாயம் செய்யும் தொழில் இல்லை என்றாலும், அவர் விவசாயக் கூலியாக தான் பணிபுரிகிறார் என்றாலும் சரியல்ல. நான்தான் எதிர்மனுதாரரை திருமணமான காலம் முதலாகவே எனது அம்மா வீட்டிற்கு வந்து என்னுடன் வாழுமாறு கூறி அவரை தொந்தரவு கொடுத்தேன் என்றாலும், நான் அடிக்கடி ஊரார் பார்க்கும் போது எனது கணவரை அசிங்கமாக திட்டி வந்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான், எனது அம்மா வீட்டிற்கு செல்லும் போது எங்கள் திருமணத்தின் போது எங்கள் அம்மா வீட்டில் இருந்து போட்ட நகைகளை நானே எடுத்துச் சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் ஒரு விவசாய கூலி என்பதனால், நான் எனது மனுவில் கோரியுள்ள வகையில் எனக்கு மாதம் 15 ஆயிரம் ரூபாயும், எனது குழந்தைகளின் பராமரிப்பிற்கு ரூபாய் 20 ஆயிரம் ரூபாயும், வருடத்திற்கு இதர செலவைகளுக்காக ரூபாய் 1,00,000/-ம் கொடுக்கும் அளவிற்கு

எதிர்மனுதாரருக்கு பொருளாதாரத் தகுதி இல்லை என்றாலும், நான் கூறியுள்ள பரிகாரங்களை அவரால் கொடுக்க இயலாது என்றாலும் சரியல்ல. எனது குழந்தைகளையும், என்னையும் பராமரித்துக் கொள்ளக்கூடிய வசதி எனக்கு உள்ளது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரையும், அவரது குடும்பத்தாரையும் துன்பத்திற்கு உள்ளாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு தான் இந்த நீதிமன்றத்தில் நான் இந்த பராமரிப்பு வழக்கோடு சேர்த்து மற்றொரு குடும்ப வன்முறை சட்டத்தின் கீழான வழக்கையும் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எனவே மேற்படி இரண்டு வழக்குகளுமே தள்ளுபடி உகந்தது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**